


அமரர் கனகசபை பினாகபாணி
அவர்களின்

# பரம பத தீபம்

23.11.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ். மறவன்புலோவைச் சேர்ந்த

# அமரர் கனகசபை பினாகபாணி

அவர்களின்


# பரம பத தீபம்

23.11.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் கனகசபை பினாகபாணி

முன்னாள் அதிபர்
(யாழ் / வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்)

பார் நோக்கி
11.11.1928

விண் நோக்கி
23.10.2002

## அமரத்துவ திதி நிர்ணய வெண்பா

*ஆண்டு சித்திரபானு தனில் வரும் ஐப்பசித் திங்களில்*
*அபர பக்க துதியைத் திதிதனில் - நீண்ட புகழ்*
*பூத்த கனகசபை பினாகபாணி பார்*
*நீத்து பரமனடி சேர்ந்தார் காண்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வாசம் குன்றா வாழ்வு தந்து
வழியெங்கும் ஒளி தந்து
தேசம் புகழும் நிலை தந்து
திரும்புமிடமெல்லாம் நினைவு தந்து
அழியாப் பிறப்பினில் ஆவல் கொண்டு
ஆன்மாவாகிய சரீரம் நீங்கி
ஆண்டவன் நிழலில் அமரத்துவமாகிய
எங்கள் பாசத் தெய்வத்தின்
பாதார விந்தங்களுக்கு
எம் கண்ணீர்ப் பூக்களால்
மலரஞ்சலி செலுத்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தேவாரம்

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

மாதர் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப்
புகுவாரவர் பின் புகுவேன்
யா துஞ் சுவடுபடாமலை
யாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடுங் களிறு
வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாத நாம நமச்சிவாயவே.

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னை யல்லால் இனியாரை நினைக்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

பால் நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

மெய்தான் னரும்பி விதிர் விதிர்த்
துன்விரை யார் கழற்கென
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (01)

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தருவே
ஐயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்று வரை
கை யாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரை லோங்கிய சுந்தரனே.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. (02)

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. (01)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடி குடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே. (02)

குழலொழி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழி வழி
யாளாய் மணஞ் செய் குடி பிறந்த
பழ அடியாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (10)

# திருப்புராணம்

திருவும் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச் சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாவே ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

ஏறுமயி லேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறும் மடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவவேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமா னபொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குரு பர என வோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து மூவர்க்குத் தமரரு மடிபேணக்

பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொரு தொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற் கிரதத்தை கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷத் தொடு ரக்ஷித் தருள்வது மொருநாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப்பவு ரிக்குத் தரி கடக எனவோ தக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகு குகு
குத்திப் புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குல கிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## காயத்ரீ மந்திரம்

ஓம் பூர் புவஹ ஸுவஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நஹ் ப்ரசோதயாத்

## திருமந்திரம்

யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கும் மாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் மாம் பிறர்க் கின்னுரை தானே.

அன்பும் சிவமும் இரண்டென்பா் அறிவிலார்
அன்பேசிவமாவ தாரும றிகிலார்
அன்பே சிவமாவ தாரும றிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்தி ருந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

ஔவைப் பிராட்டியார் அருளிய

# விநாயகர் அகவல்

## ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூக்ஷிக வாகன !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளத்தினிற் புகுந்து

குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்


எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக ! விநாயக ! விரைகழல் சரணே !

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய*

# சிவபுராணம்

*திருவாசகச் சிறப்பு*

*தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி*
*அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே –எல்லை*
*மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவா சகம் என்னுந் தேன்.*

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாளே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறத்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பதுவாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதேஅளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம் பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம்பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

1. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது: பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

2. அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரள்நிறை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே! பள்ளி எழுந்தரு ளாயே!

3. கூவின பூங்குயில்; கூவின கோழி
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!

4. இன்னிசை வீணையர், யாழினர், ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர், ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால்;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய்! எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே!

6. பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர்; மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

7. அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு; இவன்அவன்; எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்சூழ் திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்;
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்;
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி,
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே!

9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே! உன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்! வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே! கரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்! உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

10. புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ மாணிக்கவாசகர்
## அருளிச் செய்த



# திருவெம்பாவை

1 ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ? விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

3. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

5. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

6. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14\. காதார் குழையாடப் பைப்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

15\. ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

16\. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

17\. செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்
தண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஓம் சிவாஷ்டோத்தர
# சத நாமாவளி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சிவாய | நம | ஓம் | பீமாய | நம |
| ஓம் | மஹேஸ்வராய | நம | ஓம் | பரசுஹஸ்தாய | நம |
| ஓம் | சம்பவே | நம | ஓம் | ம்ருக பாணயே | நம |
| ஓம் | பிநாலினே | நம | ஓம் | ஜடாதராய | நம |
| ஓம் | சசிசேகராய | நம | ஓம் | கைலாசவாஸினே | நம |
| ஓம் | வாம தேவாய | நம | ஓம் | கவசினே | நம |
| ஓம் | விருபாஷாய | நம | ஓம் | கடோராய | நம |
| ஓம் | கபர்த்தினே | நம | ஓம் | த்ரி புராந்தகாய | நம |
| ஓம் | நீலலோஹிதாய | நம | ஓம் | வ்ருஷாகாய | நம |
| ஓம் | சங்கராய | நம | ஓம் | வ்ருஷபாருடாய | நம |
| ஓம் | சூலபாணியே | நம | ஓம் | பஸ்மோத்தூளித | |
| ஓம் | கட்வாங்கினே | நம | | விக்ராஹாய | நம |
| ஓம் | விஷ்ணு வல்லபாய | நம | ஓம் | ஸாமப்ரியாய | நம |
| ஓம் | சிபி விஷ்டாய | நம | ஓம் | ஸ்வரமயாய | நம |
| ஓம் | அம்பிகை சாதாய | நம | ஓம் | த்ரயீமூர்த்தயே | நம |
| ஓம் | ஸ்ரீ கண்டாய | நம | ஓம் | அநீச்வராய | நம |
| ஓம் | பக்தவத்ஸலாய | நம | ஓம் | ஸர்வஜ்ஞாய | நம |
| ஓம் | பவாய | நம | ஓம் | பரமாத்மனே | நம |
| ஓம் | சர்வாய | நம | ஓம் | ஸோமஸீர்யாக்னி | |
| ஓம் | த்ரிலோகேசாய | நம | | லோசனாய | நம |
| ஓம் | சிதி கண்ட்டாய | நம | ஓம் | ஹவிஷே | நம |
| ஓம் | சிவாப்ரியாய | நம | ஓம் | யஜ்ஞமயாய | நம |
| ஓம் | உக்ராய | நம | ஓம் | ஸோமாய | நம |
| ஓம் | கபர்தினே | நம | ஓம் | பஞ்சவக்த்ராய | நம |
| ஓம் | காமாரயே | நம | ஓம் | ஸதாசிவாய | நம |
| ஓம் | அந்தகாஸுதநாய | நம | ஓம் | விஸ்வேஸ்வராய | நம |
| ஓம் | கங்காதராய | நம | ஓம் | வீரபத்ராய | நம |
| ஓம் | லலாடாக்ஷாய | நம | ஓம் | கணநாதாய | நம |
| ஓம் | காலகாலய | நம | ஓம் | ப்ராஜாபாயே | நம |
| ஓம் | கிருபாநிதயே | நம | ஓம் | ஹிரண்யரேதஸே | நம |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | துர்த்தர்ஷாய | நம | ஓம் | ஸாத்விகாய | நம |
| ஓம் | கிரீசாய | நம | ஓம் | சுத்தவிக்ரஹாய | நம |
| ஓம் | கிரிசாய | நம | ஓம் | சாஸ்வதாய | நம |
| ஓம் | அநகாய | நம | ஓம் | கண்டபரஸவே | நம |
| ஓம் | புஜங்கபூஷணாய | நம | ஓம் | அஜாய | நம |
| ஓம் | பர்காய | நம | ஓம் | பாசவிமோசகாய | நம |
| ஓம் | கிரிதன்வனே | நம | ஓம் | ம்ருடாய | நம |
| ஓம் | கிரிப்ரியாய | நம | ஓம் | பசுபதயே | நம |
| ஓம் | க்ருத்திவாஸஸே | நம | ஓம் | தேவாய | நம |
| ஓம் | புராராதயே | நம | ஓம் | மஹாதேவாய | நம |
| ஓம் | பகவதே | நம | ஓம் | அவ்யாய | நம |
| ஓம் | ப்ரமதாதியாய | நம | ஓம் | ஹரயே | நம |
| ஓம் | ம்ருத்யுஞ்ஜயாய | நம | ஓம் | பூஷதந்தபிதே | நம |
| ஓம் | ஸீக்ஷ்மதனவே | நம | ஓம் | அவ்யக்ராய | நம |
| ஓம் | ஜகத்வ்யாபினே | நம | ஓம் | தக்ஷாத்வர ஹராய | நம |
| ஓம் | வ்யோமகேசாய | நம | ஓம் | ஹராய | நம |
| ஓம் | மஹாஸேன ஜனகாய | நம | ஓம் | பக நேத்ரபிதே | நம |
| ஓம் | சாருவிக்ரமாய | நம | ஓம் | அவ்யக்தாய | நம |
| ஓம் | ருத்ராய | நம | ஓம் | ஸஹஸ்ராக்ஷாய | நம |
| ஓம் | பூதபதயே | நம | ஓம் | ஸஹஸ்ரபதே | நம |
| ஓம் | ஸ்த்தாணவே | நம | ஓம் | அபவர்கப்ரதாய | நம |
| ஓம் | அஹிர் புத்ந்யாய | நம | ஓம் | அனந்தாய | நம |
| ஓம் | திகம் பராய | நம | ஓம் | தாரகாய | நம |
| ஓம் | அஷ்டமூர்தயே | நம | ஓம் | பரமேச்வராய | நம |

## நினைத்தது அனைத்தும் நிறைவேற

*ஸிம்ஹஸார் தூல ரூபஸ்ச வ்யாக்ர சர்மாம்பராவ்ருத /*
*காலயோகீ மஹாநாத: ஸர்வகாம சதுஷ்பத //*

**என்னும் சுலோகத்தைத் தினந்தோறும் காலை, மாலைகளில் 10 தரம் பாராயணம் செய்து வந்தால் தாம் நினைத்த காரியங்கள் நிறைவேறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் பாடல்



1. கோகுலத்திலே வளர்ந்தாய் கண்ணா கண்ணா
ஆகுலம் தவிர்க்க வந்தாய் கண்ணா கண்ணா
யோகு செய்யும் சிந்தையர் கண்ணா கண்ணா
நோகுமுன் களைவாய் துயர் கண்ணா கண்ணா

அஞ்சலென்றே யுரைப்பாய் கண்ணா கண்ணா
சஞ்சலமே தீர்த்து வைப்பாய் கண்ணா கண்ணா
பஞ்சைப் போல் உள் நினைப்பாய் கண்ணா கண்ணா
தஞ்சமென்றே என்னை வைப்பாய் கண்ணா கண்ணா

தேவர்களும் இன்புறவே கண்ணா கண்ணா
தவசியர் குறையறவே கண்ணா கண்ணா
தேவகியின் அன்புருவே கண்ணா கண்ணா
அவனியின் சத்குருவே கண்ணா கண்ணா

இன்பமனம் கோகுலமே கண்ணா கண்ணா
அன்பருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா
தூய மனம் கோகுலமே கண்ணா கண்ணா
சேயருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலினாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்ட மாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடனமாடும் கண்ணனாம்

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்

*அழவள்ளியப்பா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்ணன் மாடு கன்று மேய்த்து
வேணு கானம் பாடுவான்
வெண்ணைய் திருடித் தின்பதற்கு
வீடு வீடாய் ஓடுவான்

வீட்டி லுள்ளோர் உறங்குகின்ற
வேளை நோக்கி ஓர் தினம்
வாட்ட மின்றித் துணிவு கொண்டு
வந்து சேர்ந்தான் மாயவன்

ஊர்ந்து சென்று பூனை போலே
உறியை எட்டித் தொட்டனன்
சேர்ந்த பானை மூடி வீழ்ந்து
சிதறி யோசை கேட்டது

ஆச்சி அந்த ஒசை கேட்டு
யார தென்று கூவினாள்
கூச்ச மின்றிக் கண்ணனென்று
கூறி நின்றான் மாயவன்.

எங்கு வந்தாய் என்ன வேலை
என்று ஆச்சி கேட்டனள்
எங்க ளாச்சி வீடு தேடி
எய்தினன் காண் அம்மையே!

கெட்டிக் காரன் உறியை எட்டிக்
கையை வைத்த தேனடா
சட்டி மூடி தட்டி உள்ளே
எட்டிப் பார்த்த தேனடா

ஒன்று மில்லை என்று கண்ணன்
உண்மை போலப் பேசுவான்
வெண்ணெய் தன்னில் மொய்யெறும்பை
விரட்டினன் காண் அம்மையே.

பெண்கள் மாயன் வித்தை யெல்லாம்
பேசு தற்குக் கூடினர்
வெண்ணெய் தன்னை மாதர் மீது
வீசிக் கண்ணன் ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ராதா சமேத க்ருஷ்ணா – க்ருஷ்ணா
ராதா சமேத க்ருஷ்ணா (ராதா)
நந்தா குமார நவநீத சோரா
பிருந்தாவன கோவிந்த முராரே (ராதா)
கோபி மனோ ஹர – கோகுல வாசா
சோபித முரளீ – கான விலாசா
சுந்தர மன்மத – கோடிப்ரகாசா (ராதா)

5. ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய (ஓம்)

பிறவிதோறும் வினைமிகுந்து பெருகுகின்ற இருவினை
அகலவைக்கும் அருணதீபம் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஊறுதுன்பம் உடல்வியாதி ஊழ்விடாத வறுமையும்
ஆறவைக்கும் அருள்மருந்து ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஏக்கமாம் குழிக்குளே இரண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக்கரங்கள் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

சோகமோஹ தாகமீறிச் சோர்வு விஞ்சும்வேளையில்
கருணையான புனிதகங்கை ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஜனன மரண பயதரங்க சாகரம் கடத்தியே
உடனுவந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

கடுகடுத்து முனைதொடுத்த காலசூலம் சீறுநாள்
உயிர்தடுத்த கவசமாகும் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
உலகெலாம் முழங்க வேண்டும் ஓம் நமோ நாராயணாய (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லவி

தூணிலு மிருப்பார் துரும்பிலு மிருப்பார்
துரிதத்தை பரிஹரிப்பார் – நாராயணன் (தூணி)

## அனுபல்லவி

ஆணவ மில்லாத அன்பர்க ளிதயத்தில்
காணப் படுங்கருணைக் கடலாகிய கண்ணன் (தூணி)

## சரணம்

உன்னிலு மிருப்பார் என்னிலு மிருப்பார்
உயிர்க்குயி ராயுமிருப்பார் – நாராயணன்
அன்னிய மாயெண்ணாத அமலசித்த முள்ளோருக்கு
பின்னப்படா திலங்கும் பிரம்மானந்த வஸ்து (தூணி)

உள்ளிலு மிருப்பார் வெளியிலு மிருப்பார்
உலகனைத்திலு மிருப்பார் – நாராயணன்
எள்ளுக்கு ளெண்ணெய்போல் எங்கும் நிறைவுற்றாப்போல்
கள்ளமன துள்ளோர்க்குக் காணப்படாத கண்ணன் (தூணி)

சித்தாயு மிருப்பார் ஜடமாயு மிருப்பார்
சிஜ் – ஜடமாயு மிருப்பார் – நாராயணன்
பக்தியைப் பண்ணாமல் பாவத்தைச் செய்யும் கெட்ட
சித்த முடையவர்க்கு மிருத்யுவாய் தோன்றும்ஹரி (தூணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க ஒழித்தான்பித்
தாகஉண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப்பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் சக்தி

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள்செய் எவிவா கனப்பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைத்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியாரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளும்மம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கே நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழுங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிகு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தி யெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற் சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கனகசபை பினாகபாணி அவர்களின் வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாண நன்நகரில் வேளாண்குடி மக்கள் வாழ்ந்த மறவன்புலோவைச் சேர்ந்த வினாசித்தம்பி கனகசபை என்பவர் வர்த்தகப் பெருந்தகைகள் வாழ்ந்த கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவக்கொழுந்து என்பவரைத் திருமணம் செய்தார். அவ் இல்லறத்தின் பயனாகப் பிறந்தவர்கள் தாம் மங்கையற்கரசி, பினாகபாணி ஆகியோர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை அண்மையிலுள்ள கலட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் பயின்றார். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க இளமைக் காலத்தில் சீரிய ஒழுக்கமும், சிறந்த பண்பும், நிறைந்த கல்வியும் பெற்று விளங்கும் ஆற்றலுடையவராக விளங்கினார். ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்ட பின் செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்றுத் தனது சிரேஷ்ட தராதரப் பத்திர பரீட்டையில் சித்தியடைந்தார். சிறு வயதிலே தாயை இழந்த இவர் தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்தாலும் மனம் சோர்வடையாமல் தொடர்ந்து கல்வியை வளர்க்க முயற்சித்தார். தனது கல்வியின் ஆர்வம் காரணமாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர விரும்பி பிரவேசப் பரீட்சை எழுதி, அதில் சித்தியடைந்து நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தனது பயிற்சியை முடித்துக் கொண்டார். செந்தமிழ்ப் புலமையும் சமய உணர்வும் ஒருங்கமையப் பெற்ற இவர் அதன் பின் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். எழுத்தறிவிக்கும் இறைவனாக 1955ம் ஆண்டு தனது பணியை நிக்ககொல எனும் இடத்தில் அமைந்த C. C. T. M. S. பாடசாலையில் தொடங்கினார். தொடர்ந்து மலையகத்திலமைந்த பாடசாலைகளிலேயே கல்வி கற்பிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. கண்டி C. C. T. M. S., ஹற்றன் சென்ற் ஜோன் பொஸ்கோஸ் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 1968ம் ஆண்டுவரை தன் பணியைத் தொடர்ந்தார். மலையகத்திலிருந்து இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு ஆண்டுகள் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். மீண்டும் இடமாற்றம் பெற்று யா/ பரமேஸ்வராக் கல்லூரியில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். அக்கல்லூரியில் பணிபுரியும் பொழுது கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவரும் அதிபர் தரத்திற்கு உயர்த்தப்பட்டு சங்கானை A. M. T. M. S. பாடசாலையில் அதிபராக நான்கு ஆண்டுகள் சேவையாற்றினார். அங்கிருந்து கோப்பாய் R. C. T. M. S. பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று 1980 வரை அதிபராகப் பணியாற்றினார். பின்பு தனது இறுதிக் காலச் சேவையாக யாழ்/ வண். ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயத்தில் 1980 தொடக்கம் 1988 வரை அதிபராகச் சேவை புரிந்தார். அவரது சேவை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடையதாகவே அமைந்திருந்தது.

இவர் இல்வாழ்க்கைத் துணைவியாக வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சண்முகம்நல்லம்மா தம்பதிகளின் மகள் நீலாயதாட்சியை ஏற்றுக் கொண்டார். இல்லற தர்மங்களைக் கடைப்பிடித்து இல்வாழ்க்கையைச் செவ்வனே வாழ்ந்து அதில் மன நிறைவு கண்டார். தெய்வ பக்தி நிறைந்த இவர் நல்லூர் முருகன் மீது அதிக அபிமானம் கொண்டவர். அவர் வாய் முருகா, நாராயணா என்னும் திருநாமங்களை இடையறாது ஓதிக் கொண்டேயிருக்கும்.

*செய்யும் தொழிலே தெய்வம் – அதில்*
*திறமைதான் நமது செல்வம்*

எனும் முதுமொழிக்கிணங்கத் தனது வாழ்க்கையை அமைத்து, இன்று செய்யக்கூடியவற்றை நாளை எனப் பிற்போடாமல் அன்றே செய்து முடிக்கும் கொள்கையுடன் வாழ்ந்து காட்டினார். இவ்வாறு சீரிய வாழ்க்கை வாழ்ந்த அறிவுச் செம்மலின் திடீர் மரணம் அவர் குடும்பத்தவர், நண்பர்கள், உறவினர்கள் யாவர்க்கும் ஈடு செய்ய முடியாத ஓர் பேரிழப்பாகும். எனினும் பிறப்பு, இறப்பு இரண்டும் இயற்கையின் நியதி என மனத்தைத் தேற்றி அவர் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Beloved Siththappa

Siththappa, I couldn't believe my ears when I heard the news of your sudden departure from this earth.

I just cannot recollect how you buried wholly to my undertakings when I was there. You were really a tower of strength to me. Your advice as to how I should act in times of difficulty kept me in good stead.

Siththappa, I really appreciate you and your services to the most deserving cases. You were very systematic and punctuality was an important factor in your career. When I recollect my past days with you when I was small I really feel sorry that I have missed a lot. I also never felt my dearest father's untimely death as you were in our midst consoling us and guiding us in all our activities. Now I feel satisfied siththappa as I have done a little to make you both visit the holy temples in India with me. I did everything to your entire satisfaction.

My dearest siththy and siththappa were highly taken up by my acts. If not for you I wouldn't have reached this stage. Both of you took an important part in my marriage as foster parents. Your affection was so great which can't be replaced by anything. I feel proud and happy to think of the memorable days with you. Also I will be failing in my duty if I don't mention this particular act of yours in the temples re-my name. Such a great love and care you had for me.

You are no more and the place is left desolate: I have lost courage and remain grief stricken with your loss. We are all here to console your wife and lend a helping hand.

*May your soul rest in peace and guide us.*

**Sritharan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்ததேன்?

எந்தை சித்தப்பா எங்கள் திருவிளக்கே
தந்தை பறிபோன தனியேனை தத்தெடுத்து
முந்தியிரு அவையத்தே முனைவன் நீ என்றீர்
தாயன்பா தந்தையன்பா உறவன்பா ஒன்றுமில்லை.
பேரன்பு கொண்ட என் சித்தப்பா தன்னிலையில்
தாயன்பு காட்டித் தமியேனை நடக்க வைத்தீர்
ஆதரவுக் கரமொன்று அணைத்த களிப்பினில்
ஏதுண்டு துன்பமென்று எண்ணிக் கிடந்தேனை
தீயுண்டு தீர்க்கும் தீராக் கவலையதில்
மாயென்று சொல்லி மறைந்ததேன் சித்தப்பா ?

அன்பின் திருவுருவாம் அறத்தினில் நிலை நின்று
இன்பம் பலதுறந்தெம்மை இவ்வுலகில் ஏற்றிவைத்து
பாசமாய் என்னிலேயே பாதியான எனது அக்கைக்கு
நேசமாய் தளிர்க்கரம் தந்து தேற்றுகிறேன்.

மகன் சிறீதரன்
*(இலண்டன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே உருவான எங்கள் .....

*"நெடிதுயர்ந்த உருவம்*
*தீட்சயமான கண்கள்*
*'பளிச்' என மிளிரும் பற்கள்*
*வெள்ளை வெளேரென்ற தேசிய உடை*
*எல்லோராலும் அன்பாக மாஸ்டர் என அழைக்கப்படுவர்"*

ஆமாம். இவர் தான் எங்கள் சித்தப்பா. 'பிள்ளை' என அழைக்கும் உங்கள் குரல் மட்டும் கேட்கிறது. எங்குற்றீர்? சித்தப்பா நீங்கள் எங்குற்றீர்?

*அற்புதமாய் விடிந்த*
*அதிகாலைப் பொழுதினிலே*
*விதி என்று கூறி*
*சதி செய்த இறைவனவன்*
*சடுதியாய் வந்துங்கள்*
*உயிரைக் கவர்ந்திட அனுப்பிய*
*காலன் அவனுடன் சென்றதேனோ?*

உங்கள் பிரிவுச் செய்தி எம்மையெல்லாம் வாட்டுகிறது. எனினும் இயற்கையின் நியதி இதுவே எனத் தேறி நிற்கின்றோம்.

இவர் நேர்மை, அன்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தன்னலமற்ற சேவை, பிறர் நலம் பேணல் போன்ற மனித விழுமியங்களைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து எல்லோர் மனதிலும் உயர்ந்து நிற்கின்றவர். கல்விச் சேவையே உயர்ந்தது எனக் கருதி வித்தியாசாலைக்கு அதிபதியாகிச் சின்னஞ் சிறார்களை அன்பாக, பண்பாக, கண்டிப்பாக வழிநடத்தி வாழ்க்கையில் வெற்றி பெற வைத்தவர். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பதற்கிணங்க இவர் தனது பாடசாலைப் பிள்ளைகளை வளர்த்து வர நாங்கள் தன் பாட்டில் வளர்ந்தோம். கல்வியில் உயர்ந்தோம். பட்டங்கள் பல பெற்றோம். உயர் தொழில்களில் அமர்ந்தோம். அவருக்குப் பெருமை தேடித் தந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வாழ்வின் சோதனைக் கட்டங்களில் எல்லாம் காந்தித் தந்தை போல விளங்கி சாந்தி அளித்தவர். எங்கள் முன்னேற்றத்திற்குப் பல வகையிலும் பாடுபட்ட சித்தப்பா எங்கள் 'சண்முக வாசா' இல்லத்தில் எங்கள் அக்கையுடன் வாழ்ந்த இல்லற வாழ்வு எங்கள் கண்முன் நிற்கிறது. இல்லறம் தனில் நல்லறம் கண்டு வானுலகம் சென்ற அவரது சிறப்பை நாம் எவ்வாறு சொல்வது? எதைச் சொல்வது?

எங்கள் சித்தப்பாவின் வெற்றிடத்தை யாராலும் நிரப்பிட முடியாது. இயற்கையின் நியதி இதுவென வள்ளுவர் எடுத்துக் காட்டும்

*"நெரு நலுளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமையுடைத்திவ் வுலகு"* என்ற கூற்றுக்கிணங்க நாம் எம் மனத்தைத் தேற்றிக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**மக்கள், மருமக்கள்**

# எங்கள் ஆசைப் பாட்டாவே ....

அரங்கேற்றம் காண ஓடோடி வந்தீரே – அன்று
ஆசையுடன் பகர்ந்த மொழிகள் காதில் ஒலிக்கின்றதே
இல்லையெனாது நாம் அழைத்தவுடன் வந்திடுவீரே
ஈற்றில் எம்மைவிட்டு எங்கு தான் சென்றீர் ?
உம் நினைவால் நாம் துயருறுகின்றோம்.
ஊதிவிடும் துன்பம் அதனை என நீர் வந்து கூறீரோ.
எட்டி நின்று பார்க்கின்றீர்
ஏழை நாம் படும் அல்லல் தனை
ஐயமின்றி உரைக்கின்றோம்
ஒருவருமே கேட்பாரில்லை
ஓயாமல் புலம்புகின்றோம்.
ஔடதம் தான் தந்திடுவோம்
சாந்தி அடைந்திடுவீர் பாட்டாவே!
எங்கள் அக்கைப் பாட்டாவே !

இந்துஜா *(பேத்தி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குற்றீர் .......?

ஆதி முதல் எம்மை அரவணைத்த பாட்டாவே
அதிகாலை வேளை அற்புதமாய் இருக்குமென்று
சதிகாரக் காலன் சடுதியாய் அழைத்திட்டவே
விதியென்று பரமபதம் சேர்ந்திட்டீரோ
பாட்டாவே நீர் எங்குற்றீர் .....?

பாட்டாவென்று அன்புடனே அழைத்திட முடியாமல்
மட்டில்லா துயருறும் எம் நிலையை
கட்டில்லா வெள்ளமென ஒழுகும் கண்ணீரை
தட்டியே ஆறுதல் கூறிட யாருமில்லை அறிந்திட்டீரோ
பாட்டாவே நீர் எங்குற்றீர்..... ?

எப்போதும் இளமையாய் வேலை செய்யும் பாங்கினை
தப்பேதும் சொல்லமுடியா உன்பாசப் பரிவதனை
முப்போதும் இறையடி தொழும் பக்தி நிலையை
ஒருபோதும் குறைசொல்ல முடியாத குன்றிலுயர்
பாட்டாவே நீர் எங்குற்றீர் ..... ?

நீயகன்ற காரணத்தால் ஏற்பட்ட வெற்றிடமது
நிரப்பிட வழியின்றிப் பேதைகளாய் நிற்கின்றோம்
ஊனை விட்டு உந்தன் உயிர் நீங்கிட்ட போதிலும்
உன் நினைவலைகள் எம்மை விட்டு நீங்காது
உறைந்திருக்கும் பாட்டாவே .... ?

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தனித்தன்மை வாய்ந்தவர்"

நுவரெலியா மாவட்டத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய நான் 15.03.1985 இல் இடமாற்றம் பெற்று யா/ வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தில் எனது கடமையைப் பொறுப்பேற்றபோது திரு. க. பினாகபாணி அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவர் 10. 11. 1988 இல் இளைப்பாறும் காலம்வரை இவருடன் பணியாற்றினேன். இக்காலப் பகுதியிலேயே இவரை நன்கு அறியக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

இவர் வித்தியாலயத்தின் அதிபராக இருந்த காலத்தில் பலதரப்பட்ட முன்னேற்றத்திலும் அதிக சிரத்தை கொண்டு உழைத்தவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாயிருந்து மிகுந்த ஆர்வத்துடன் அறிவொளி பரப்பும் அரிய தொண்டில் ஈடுபட்டவர். தண்டனையிலும் பார்க்க அன்புதான் மாணவரை நல்வழிப்படுத்தும் நல்ல சாதனம் என்பதை செயல் முறையில் காட்டி மாணவர்களின் மரியாதைக்கு இருப்பிடமாகத் திழ்ந்தவர். வித்தியாலயத்தின் பொறுப்புக்களை ஆசிரியர்களின் தகமை, ஆர்வம், அனுபவம் என்பவற்றிற்கு ஏற்ப பகிர்ந்தளித்து ஆசிரியர்கள் ஆர்வத்துடன் தமது கடமைகளைத் திறம்படச் செய்வதற்கு உறுதுணையாகச் செயற்பட்டவர்.

அமரர் பினாகபாணி அவர்கள் பழக இனியவர். அமைதியும் அடக்கமும் உடைய பண்பாளர். வாழ்வில் எளிமையானவர். பிறருக்குத் தீங்கு எண்ணியும் அறியாத உத்தமர். உறவினர்களோடு மாத்திரமல்லாமல் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகியவர். இப்படிப்பட்ட ஒரு பண்பாளனுடைய திடீர் மறைவு எல்லோருக்கும் கவலை தருவதாகும்.

ஒரு பாடசாலையின் செயற் திறன்கள் அனைத்திற்கும் காரண கர்த்தாவாக விளங்கும் அதிபர் பதவியைக் குறைவுறாது நிறைவுடன் நான் பணியாற்ற வழி காட்டிய அமரர் பினாகபாணி அவர்களின் ஆத்மா இறைவனுடைய பாதாரவிந்தங்களை அடையப் பிரார்த்திக்கிறேன்.

கதிர் செல்வநாயகம்
*அதிபர்,*
*யா / வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்,*
*ஆனைக்கோட்டை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தன்னலம் கருதாப் பெருந்தகை"

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட தன்னலம் கருதாப் பெருந்தகை அமரர் கனகசபை பினாகபாணி அதிபர் அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து மிகவும் வேதனைப்பட்டோம்.

அரிது அரிது மானிடராதல் அரிது
*மக்கள் சேவையில் மகத்தானது ஆசிரிய சேவை.*
*எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.*

மேற்படி வாக்கியங்களுக்கமையப் பெற்ற அதிபர் அவர்கள் கல்வியறிவு, ஒழுக்கம், ஆசாரம், தெய்வ நம்பிக்கை ஆகிய நற்குணங்களால் உயர்ந்தவர். இவர் அறிஞர்களாலும் ஆத்மீகவாதிகளாலும் பெரிதும் மதிக்கப்படுபவர்.

ஏழை மாணவர்கள், கஷ்டப்பட்டோர், சுற்றத்தவர்களுக்குத் தன்னலம் கருதாது வேண்டிய உதவிகள் செய்து அவர்களது உயர்வு கண்டு இன்பமடையும் உத்தமர்.

நேற்று இருந்தார் இன்று இல்லை என்ற இயற்கை நியதியை உணர வைத்து இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

அன்னாரின் மனைவி, உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

செ. தில்லைநாதன்
*(இளைப்பாறிய அதிபர்)*
*குடும்பத்தினர்*
*உடுவில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்வாங்கு வாழ்ந்த பண்பாளர்"

பூரண வாழ்வு பொலிவோடு வாழ்ந்த நிறைவோடு மண்ணில் உடற்சுமையை இறக்கிவிட்டு விண்ணோக்கிவிட்ட பெரியார் க. பினாகபாணி அவர்களின் பிரிவு துயரத்தைத் தந்தாலும் அவர் நினைவுகள், செயல்கள், வழிகாட்டல்கள் அவர் சார்ந்த அனைவரினது உள்ளங்களில் என்றும் அழியப்போவதில்லை. திடீரென தழுவிக் கொள்ளும் "மரணம்" நல்லோர்களுக்குக் கிடைக்கின்ற அற்புத முடிவு என்றாலும் "மரணம்" என்று வரும்போது அவருடன் பழகியவர்களுக்குத் தாங்கொண்ணாத் துயரையே தருகின்றது.

அமரர் க. பினாகபாணி அவர்கள் மனிதப் பண்புகள் நிறைந்த அற்புத புருஷர் என்பதை அவரது ஒழுக்க நடவடிக்கைகளும் அவர் தன்னுடன் பிறந்த சகோதரிக்கும் தன்னுடனிணைந்த தாரத்திற்கும் செய்த பணிவிடைகள், சம்பவங்கள் வலியுறுத்துவனவாகவே அமைந்தன. 1995ம் ஆண்டு இடப் பெயர்வின்போது எங்களுக்கு வீடு தந்து அரவணைத்து எனது பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் ஆசானை வைத்தியசாலையில் பராமரிக்கும் பேறு பெற்றேன்.

அவருடன் நானும் கிருஷ்ணரும் நெருங்கிய தோழமை கொண்டு பழகிய அந்நாட்கள் அவர் எங்களைத் தூய நேயத்துடன் நேசித்த நாட்களை, இன்று மலரும் நினைவுகளாய் மீட்டுப் பார்க்கின்றேன். பரவசம் மிகக் கொள்கின்றேன். அவரின் ஆத்மா சாந்தி அடைவதாக !

மா. இராமலிங்கம்
*கிராம அலுவலர்*
*சுன்னாகம் J/197*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ளமே !

"கிருஷ்ணர்" எனும் உங்கள் அன்பான சொற்கள் என் செவியில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. உங்கள் பிரிவு என்னை ஆற்றொணாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. தினமும் உரையாடும் உங்கள் குரல் மனதைவிட்டு அகலவில்லை. பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி என்பதந்கிணங்க நீங்கள் உங்கள் உலகியல் கடமைகளை முடித்துக் கொண்டு இறைவன் தாள் சென்றுவிட்டீர்கள். ஆனால் இருப்பவர்கள் மனம் ஆறுதல் அடைய மறுக்கின்றதே. இருப்பினும் மனதைத் தேற்றி உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

*என்றும் உங்களை மறவாத*
ப. கிருஷ்ணன்

*கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்,*
*சிவன்கோயிலடி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மக்களுக்கு ஓர் கையேடு

## கிரியைகளில் பங்கு

### விநாயக குரு வழிபாடு

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமாகிய பொருள் பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி = இல்லாத, நாயகர் = தலைவர், அஃதாவது தமக்குத் தலைவரில்லாதவர், மேலான தலைவர் எனப் பொருள்படும்.) எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயக வணக்கம். கிரியை இனிது நடந்து முடிவுற முதல்வனை வணங்குதல் இது. குரு சமய கிரியைகளுக்கெல்லாம் தலைவராதலாலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர்.

(கு= மலம், ரு = நீக்குபவர்) சந்தனம், மஞ்சள் அல்லது கோமயம் (பசுச்சாணம்) இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அருகம்புல் மேலே சாத்தி வணங்குவது வழக்கம்.

### பவித்திரமணிதல்

பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவகளினின்றுங் காத்தல்.

(பவித்திரம் - பதனாத் த்ராயதே பாவத்திலே விழுதலினின்றும் காப்பது - காமிகம்)

### சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்ன காலத்திலே, இன்ன இடத்திலே, இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழுஞ் சிருட்டித் தொடக்கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதாலே காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கற்ப முறை

ஆண்கள் வலது கையில் தருப்பைப் பூ, அரிசி அல்லது எள்ளு முதலியவற்றை வைத்துக்கொண்டு வலது கையை மேலாகவும், இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி முழந்தாளில் வைக்க வேண்டும். (பெண்கள் இடது கையையும் இடது முழந்தாளையும் பாவிக்க வேண்டும்).

## சங்கற்ப வாக்கியத்தின் கருத்து

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ் வதமந்வரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தில் முற்பகுதியில் சம்புத்துவீபத்தில் பாரத வருஷத்தில் பரத கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே (இடத்தின் பெயர்) பிரபவ முதலான அறுபது வருஷங்களுள் (இன்ன) வருடத்தில் (இன்ன) சமயத்தில்– (இன்ன) பருவத்தில் – (இன்ன) மாதத்தில் – (இன்ன) பட்சத்தில் – (இன்ன) திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் – (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இந்த புண்ணிய தினத்தில் மம (என்னுடைய) – (இன்ன) நோக்கமாக (இன்ன) கிரியை செய்யப் போகிறேன்.

## கும்பம் வைத்தல்

கடவுளைக் கும்பத்தில் வழிபடும் போது, கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகிறது. வாழையிலையை அதன் தலைப் பகுதியை வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக வைத்து அதில் நெல் அல்லது பச்சை அரிசி இட்டு, தண்ணீர் நிறைந்த குடம் வைத்து மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்குக் கீழ் தேங்காயைக் குடத்தின் மேல் வைத்து கும்பம் வைக்கலாம். கும்பத்திற்கு நூல் சுற்றி ஒரு பட்டுப் போர்த்தல் வேண்டும். தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலை மயிராகவும், குடம் தசையாகவும், நூல் நாடிகளாகவும், பட்டு தோலாகவும், தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகிறது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் அன்றாடக் கிரியைகளில் நடக்கும் சில முறைகளும் அதன் தத்துவங்களும்

## மாவிலை (மாமரத்து இலை)

இது முக்கியமாக மங்களப் பொருளாகவும் தோரணமாகவும் கட்டப்படுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள், இல்லங்கள், திருமண வைபவங்களிலும் இம்மங்களப் பொருள் பயன்படுத்தப்படும். சகல வைபவங்களுக்கும் கும்பம் வைக்கும் பொழுது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது. தேங்காய் தலையாகவும் கும்பத்துக்குச் சுற்றும் நூல் நாடியாகவும், அதற்குள் இடும் நீர் இரத்தமாகவும், கட்டப்படும் பட்டு உடையாகவும் பயன்படுத்தப்படும். மாவிலை தோரணம் அமைக்கும்போது மூன்று முறையாகப் பயன்படுத்தப்படும்.

1. *நற்காரியங்கள் :* ஆலயங்களில் நடைபெறும் உற்சவம், விழாக்களிலும், திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுபகாரியங்கள் நடைபெறும் போது மாவிலைத் தோரணம் இலையின் முன்பக்கம் வாசலின் முன்பக்கமாகவும் காம்பு பின்பக்கமாகவும் முன்புறமாக வளைத்து இலையின் நடுப்பகுதியில் குற்றிக் காம்பு பின்பக்கம் தெரியும் வண்ணம் தொங்கவிடுதல். இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தன்மையாகும்.

   *கும்பம் வைக்கும் போது :* தேங்காயின் கீழ் அமைத்தல் ஐந்து அல்லது மூன்று அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

2. *அபரக்கிரியைக் காலங்கள்:* இது வீட்டில் மரணச் சடங்கு நிகழும்போது அமைக்கப்பட வேண்டிய முறை. மாவிலையின் நடுப்பகுதியை இலையின் காம்பு பின் பக்கமாக மடித்து தொங்கவிடல் முறையாகும். இது இம்முறைக்கு மட்டும்.

*வாழைமரம் :*

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய், பழம், பூ, கனி உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதேபோல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக்கூடிய நிலை வரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. இது வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழைமரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைத்தால் அது மிகவும் சிறப்பாக அமையும். மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக் காட்டாக அமைகிறது. வாழை மர இலையினைப் பயன்படுத்தும் முறை : கும்பம் வைக்கும் போது தலைநுனிப் பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இதுமட்டுமல்ல சாப்பிடும்போது கூட இப்படியாக அமைத்தல் சிறப்பாகும்.

## நித்திய கருமங்கள்

ஆசார அனுட்டானங்கள் ஒரு மனிதனின் வாழ்வில் நிறைந்த பூரணத்துவம் கொடுப்பதாகும். சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழுந்து காலைக்கடன்கள் முடித்து, தண்ணீரைச் சிவதீர்த்தமாகப் பாவித்து, ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, ஜெபம், தியானம் போன்றவை குறைந்தது ஐந்து நிமிடமேயாயினும் செய்து, இயலுமாயின் ஆலய தரிசனம் செய்து, சுத்தமான வாழையிலையில் உணவு உட்கொள்வது உத்தமமாகும். பிரதி நாட்கள் தோறும் இம்முறையைக் கைக்கொள்வது உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் ஆன்மபலம் தரும். மனம் தூய்மை பெறும்.

## நித்திய அனுட்டானம்

இது காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் செய்வது மிகவும் உத்தமமாகும். காலையில் சூரிய உதயத்தின் போதும், மதியம் நடுப் பொழுதின் போதும், மாலையில் சூரிய அஸ்தமனத்தின் போதும், நித்திய அனுட்டானம் செய்து சிவனைத் தியானிப்பது மிகவும் நன்மை பயக்கும். தனியான சுத்தமான இடத்தில் அமர்ந்து "திருநீற்றை" தீட்சையின் போது கூறிக் கொடுத்த மந்திர உச்சாடனத்துடன் குழைத்து, நெற்றி, மார்பு, நாபி, கை, கால், புஜம், இடுப்புப் போன்ற இடங்களில் பூசி அதற்குரிய தியான மந்திரங்களை ஜெபிப்பது அனுட்டான முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சடங்குகள்

## அன்னப் பிராசனம்

பிறந்து ஆறாம் மாதம் முதல் இரட்டை மாதங்களில் ஒன்றில் ஆண் குழந்தைக்கும், ஐந்தாம் மாதம் முதல் ஒற்றை மாதங்களில் ஒன்றில் பெண் குழந்தைக்கும் அன்னப் பிராசனம் செய்பலாம். பிள்ளையார் பூசை செய்து சிவாக்கினி காரியங்களுடன் நவக்கிரக பூசையும் இக்கிரியைகளில் இடம் பெறுவது சிறப்பு. அக்கினி முன் கிழக்கு முகமாக குழந்தையை இருத்தி, நெய் கலந்த பாயாசத்தைச் சிவாக்கினியில் ஓமஞ் செய்து சிவபீஜ மந்திரத்தால் அப்பாயசத்தையே குழந்தைக்கு ஊட்டுவது முறை. பெண் குழந்தைகளாயின் அக்கினி காரியம் வேண்டியதில்லை என்றும் சொல்வர்.

இதற்குப் பால் பருக்கல், சோறு தீற்றுதல் எனப் பேச்சு வழக்கில் கூறப்படுவதுண்டு. ஆண்களுக்கு 6ம், 8ம், 10ம், 12ம் மாதமும், பெண்களுக்கு 5ம், 7ம், 9ம், 11ம் மாதமும் சுபமுகூர்த்தம் பார்த்து, உப்பு நீக்கிய, சர்க்கரை அமுது அல்லது கற்கண்டு அமுது பொங்கி, ஆலயங்களில் அல்லது வீட்டில் வைத்து பூஜை செய்து தந்தை மூன்று தடவை எடுத்து ஊட்டி மற்றோரும் எடுத்து ஊட்டி ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழக் குழந்தையை ஆசீர்வதிப்பர்.

## வித்தியாரம்பம்

கல்வி பயிலத் தொடங்குதல். இது ஐந்தாம் வயதில் நடைபெறலாம். சுபவேளையில் பிள்ளையார் பூசை, சரஸ்வதி பூசை செய்து வித்தியாரம்பம் செய்தல் வேண்டும். குழந்தைக்கு முதன்முதலில் கல்வி கற்க ஆரம்பித்தல். பெரும்பாலும் எம்மவர்கள் விஜயதசமி எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தியன்றே வித்தியாரம்பத்தை மேற்கொள்வார்கள். இருப்பினும் தைப்பூசத்தன்று மற்றும் உத்தராயணத்திலே ஜாதகரின் நட்சத்திரத்திற்கு ஏற்ப அமைந்த சுபநாளிலும் இதைச் செய்யலாம். தந்தை அல்லது ஆலயகுரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம்பத்தைச் செய்யலாம். கல்வியில் மேன்மை அடையவே, முதற்கல்வியைச் சுபநாளில் சுபநேரத்தில் செய்வது எம்மவர் மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் வழிபாடு

மூன்று தரம் அல்லது ஐந்து தரம் அல்லது ஏழு தரம் அல்லது ஒன்பது தரம் கோயிலை வலம் வந்து வழிபாடு செய்யலாம். ஒரு தரம் அல்லது இரு தரம் கோயிலை வலம் வருதல் குற்றமாகும்.

## அத்திவாரமிடல்

நாம் வீடு கட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்திற்குள் முதன்முதலில் செய்யும் பூஜையானது அத்திவாரமிடல், அதற்கு நாம் முறையாகப் புரோகிதரை (பிராமண குருவை) அணுகி அவருடைய அறிவுரை ஆசியுடன் புண்ணியஷேத்திரங்களாய் விளங்கும் ஆலயங்களின் வீதி மண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், ஆனைக்கோட்டு மண் (ஆனைபாதம் பட்ட மண்), எருதுக்கோட்டு மண் (எருது பாதம் பட்ட மண்), குளத்து மண் போன்றவற்றை ஒரே அளவில் எடுத்துக் குழைத்து பெட்டி செய்து, அடிப்பேழையில் பள்ளஞ் செய்து அவற்றில் நவரத்தினக் கற்களைப் போட்டுத் தங்கத் தகட்டில் "வாஸ்து யந்திரம்" போட்டு ஈசான மூலையில் (வடகிழக்கு மூலையில்) வைத்துப் பூஜை செய்ய வேண்டும். வீட்டின் பெரியார் கையால் அதைக் குழியில் இட்டு அத்திவாரமிடல் வேண்டும்.

இதற்குரிய விளக்கம் யாதெனில் காலங்காலமாக எம் சந்ததியினரை வாழவைக்கும் "கிரகலக்சுமி" எனப்படும் வீட்டையும் எம்மையும் தாங்கி நிற்கும் பூமாதேவியே எம்மால் இயன்ற நவரத்தின, பொன், பொருள், தானங்கள் உமக்கு அர்ப்பணிக்கிறோம். அதை காலைவேளையில் சூரிய பகவான் சாட்சியோடு மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்து அவர்களுக்காகவே என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும் சிவாசாரியர்களின் துணையோடு முறையாக உமக்கு அர்ப்பணிக்கின்றோம். எமது வீட்டு நிலத்தில், நீர்வளம், நிலவளம், பயிர்வளம் நிறைந்து நிற்க அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கும் பூஜையாகும்.

அதேபோன்று வீட்டு வேலைகள் நடைபெறும் காலம் வீட்டிற்கு முதல் நிலை, வளை என்பன வைக்கும்போது அதற்குரியவர்கட்கு தச்சுவேலையாளிக்கு வஸ்திரம் தட்சணை, தாம்பூலம் கொடுத்து உபசரித்து, அவர் மனம் மகிழ எமை வாழ்த்திட வழிசெய்யும் உபசாரமாக இது அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலே வழிபாட்டறை அமைக்கும்போது கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக அமைப்பது உத்தமமாகும். பொதுவாகவே வழிபாட்டறை தனிமையானதாகவும், பரிசுத்த இடமானதாகவும் அமைவது வீட்டிற்குச் செல்வ போகங்களைக் கொடுக்கும். தீட்டுகள் (ஆசௌசம்) வரும் காலங்களில் வழிபாட்டறையை யாரும் அணுகாது மூடிவிடுதல் உத்தமம்.

## கிரஹப் பிரவேசம்

கிரஹப் பிரவேசம் எனப்படுவது, ஒரு புதிய வீட்டைக் கட்டி முடித்து முதல் முதலாய் வீட்டினுள் பிரவேசிப்பதாகும். இதற்கு முதல்நாள் இரவில் வாஸ்த்து சாந்தி, நவக்கிரஹ ஹோமம், பூஜை என்பன செய்து அடுத்த நாள் காலையில் கணபதி ஹோமம், லக்ஷ்மி ஹோமம் செய்து வீட்டில் பால் காய்ச்சி, அமுது பொங்கிப் பட அறையில் விஷேட பூஜைகள் செய்து, குரு, பெரியார் ஆசி பெற வேண்டும்.

முதல் நாள் இரவில் செய்யப்படும் பூஜையானது "வாஸ்து சாந்தி பூஜை" வாஸ்து எனப்படும். தேவதை வீட்டின் காவல் தெய்வமாய் போற்றப்படுவர். அந்த வாஸ்த்துவைக் கும்பத்தில் "ஆவாகனம் செய்து" (மந்திர கிரியா நெறியால் வரவழைத்து) பிரியமாய் பூஜையும் ஹோமத்தில் ஆகுதியும் கொடுத்து, வைக்கோலிலே பொம்மை கட்டி, அப்பொம்மைக்கு தீமூட்டி வீட்டைச் சுற்றியும் வீட்டின் உள்ளும் சுற்றி இழுத்து, துஷ்ட தேவதைகள், கண்ணூறுகள் எல்லாம் அந்த நெருப்பில் ஈர்த்து, மீண்டும் அணுகாவண்ணம், வாஸ்த்து கும்பஜலம் எங்கும் தெளித்து, அந்த வைக்கோல் பொம்மையை முற்சந்தியில் போட்டு எரித்து அந்த துஷ்ட தேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் முகமாய் நீற்றுப் பூசனி வெட்டி அர்ப்பணித்து விடுதல் வேண்டும்.

அடுத்தநாள் காலையில் மங்களமாய் கணபதி, மஹாலஷ்சுமி ஹோம பூஜைகள் செய்து அந்தணர்கள், சுமங்கலிகள் முதலியோர்க்கு தட்சணை, வஸ்திரம் முதலிய தானம் கொடுத்து அவர்கள் திருப்தி அடைந்து மனப்பூர்வமாய் ஆசி வழங்க வேண்டும்.

கிரஹப் பிரவேசத்தில் செய்யப்படும் கிரியை, புண்ணியாக வாசனம், வாஸ்து சாந்தி, நவக்கிரக ஹோமம், மிருத்தியஞ்ச ஹோமம் மற்றும் கணபதி, லக்சுமி ஹோமங்கள் என்பனவாம். மற்றும் வீட்டின் சொந்தக்காரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரவர் வசதிக்கேற்ப விரிவாய், சுருங்கச் செய்யலாம். கும்பங்களிலே அவ்வவ் தெய்வங்களை வரித்துப் பிராமணோத்தமர்களால் வேதமந்திரங்கள் பாராயணம் செய்தும் மருந்து வகை நிறைந்த சமித்துக்கள் ஹோமாக்கினியில் இட்டு, வீட்டிலே தெய்வ சானித்தியம் நிறைந்த ஹோம புகைமண்டலம், மந்திரசக்தி கொண்ட கும்பஜலம் போன்றவற்றினால் வீடு பரிசுத்தமாகின்றது., தெய்வீக அருள் நிறையப் பெருகுகின்றது.

# கிரஹப் பிரவேச விதிகள்

1. வாசல்கால் வைக்காமலும், தரை பூசாமலும், சுவரில் சுண்ணாம்பு அடிக்காமலும், மனைவி கர்ப்பமாக இருக்கும் காலத்திலும், இயற்கை உபவாதம் நடக்கையிலும், வேதம் சொல்லாமலும், வாஸ்து ஹோமம் செய்யாமலும் புதிய வீட்டில் கிரஹப் பிரவேசம் செய்யக் கூடாது.

2. இயற்கை உத்பாதம் என்பது இடியுடன் கூடிய மழை காலம் மற்றும் புயல்காற்று, நில நடுக்கம் உண்டாகும் காலம், வானத்தில் வால்நட்சத்திரம் தோன்றும் காலம் போன்றவை. இவை விலக்க வேண்டும்.

3. கிழமைகளில் செவ்வாய், சனி, விலக்கத்தக்கவை. கிரஹப் பிரவேசம் செய்யும் வீட்டுத் தலைவனின் ராசிக்கு எட்டில் சந்திரன் இருக்கும் காலமும் விலக்கத்தக்கவை. மேலும் நல்ல நாளும் கோளும் அறியாமல் பிரவேசிக்கக் கூடாது.

4. முதலில் பசு செல்வதால் லட்சுமி தேவி சந்தோஷம் அடைகிறாள்.

5. அடுத்துத் தம்பதிகள் குல தெய்வ, இஷ்ட தெய்வப் படங்களுடன் பிரவேசிப்பதால் முன்னோர்களும் கிரக தேவதைகளும் பிரியமடைகின்றன.

6. சுமங்கலிப் பெண் இல்லத்தில் உள்ளே செல்வதால் மஹா லஷ்மி வாசம் உண்டாகிறது. (ஸ்வஸ்தி வசனம் வேத கோஷம்) இவை இரண்டாலும் அபசகுனங்கள் விலகுகிறது.

7. நண்பர்கள் அன்று விருந்து உண்பதால் அக்னி அருளும் வாஸ்து தோஷமும் நீங்குகிறது.

8. கூடுமானவரை பூஜை அறையும் கழிவறையும் பக்கத்தில் இல்லாமலும், சமையலறை கடந்து கழிவறை அடையாமலும் வாசலுக்கு நேர் கிணறு வைக்காமலும் முதலில் கட்டிய பிரதான வாயிலை மூடாமல் இருப்பதுவும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணம்

## விவாகம்

மானிடப் பிறப்பு எடுத்ததிற்கு அர்த்தபுஷ்டியாய் அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நற்பயன்களை அடைவதற்கு, ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்வது "திருமணம்" என்கின்ற இருமனம் இணையும் இனிய நாளாகும்.

## திருமணத்துக்கு முன் நிகழ வேண்டிய கருமங்கள்

பருவம் அடைந்த ஆண், பெண் ஆகிய இருவரின் ஜாதகப்படி விவாகப் பொருத்தம் உரிய ஜோதிடர் மூலம் முறைப்படி பார்த்து பொருத்தம் நிச்சயம் பண்ணின பிற்பாடு பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு நன்னாளில் சென்று தாம்பூலம் பரிமாற்றம் செய்தல் அதாவது மங்களப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழவகைகள், இனிப்புப் பலகாரத்துடன் சென்று திருமணத்தை நிச்சயித்தல். அதன்பின் திருமண நாளை நிச்சயித்து விட்டு, பின் பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று மேற்கூறியபடி தாம்பூலம் மாற்றிப் பின் பொன்னுருக்கல் வைபோகம் செய்தல். அதாவது மாங்கல்யம் தாலி செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில், அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் செய்தல் வேண்டும். பின்புதான் பெண்ணுக்குரிய கூறைப் புடைவை போன்றவற்றையும் கடையில் நல்ல நாளாகப் பார்த்து வாங்க வேண்டும். பின் திருமண நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன் முகூர்த்தக்கால் (அதாவது பந்தல்கால்) ஊன்றுதல் நடைபெற வேண்டும். இது முள்முருங்கை மரத்தைப் பயன்படுத்தி சுமங்கலிப் பெண்களால் வீட்டு வளைவில் ஈசான மூலையில் ஊன்றி நவதானியம் இடுதல். இதேமாதிரிப் பெண் வீட்டிலும் இடுதல் வேண்டும். இதன் பின்புதான் திருமணக் கிரியைகள்.

முற்கிரியையாய் மணமகன் மணவறைக்கு (திருமண மண்டபத்திற்கு) அழைத்து வருதல். வலதுபக்கமாக அழைத்து வரவேண்டும். (அதாவது சிவாசாரியார் இருக்கும் பக்கமாக) முதலில் சங்கற்பம், பிள்ளையார் பூஜை, புண்ணியாகம், பஞ்சகவ்விய சுத்தி போன்ற கிரியைகள் நடைபெற்று அதன்பின் அங்குரார்ப்பணம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குரார்ப்பணம் எனப்படுவது முளைப்பாலிகை இடுதல். இது படைத்தலைக் குறிப்பதாகும். இதில் சக்தியம்சம் பெற்ற சந்திரன் பூஜிக்கப்படுவது மரபு. குறிப்பாக, பயிர்கள் எனப்படும் தாவரங்களுக்கு அதிபதி சந்திரன். எனவே சந்திர கும்பத்தைச் சுற்றி ஐந்து அல்லது மூன்று என்ற கணக்கில் மண் போட்ட சட்டிகள் சுற்றி வைத்து, மேற்கூறிய கணக்கில் 5 அல்லது 3 சுமங்கலிப் பெண்களை வரவழைத்து அவர்கள் கையால் முளைப்பாலிகையைச் சட்டியில் இடுவதே அங்குரார்ப்பணம். மங்களக் கிரியா வைபவங்கள் அனைத்திலும் இந்தக் கிரியை உண்டு. திருமணத்தில் இதைச் செய்வதன் பொருள், சந்ததி பெருகும் பொருட்டும், நவதானியம் எனப்படும் முளைப்பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு மனிதன் தேவைக்கே பயன்படுவது போல, இல்வாழ்க்கையில் கணவன், மனைவி, மற்றோருக்கும் தம்மால் இயன்ற உதவி புரிந்து அறத்தோடும், என்றும் பாலிகை இடும் சுமங்கலிகள் போல் மங்களமாய் வாழ வேண்டும் என்பதற்காகவே. மணமகன், மணமகள் என இருவருக்கும் தனித்தனியாக அங்குரார்ப்பணக் கிரியை செய்வது மரபு. (மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருப்பாள்).

## ரட்சாபந்தனம்

இதைக் காப்புக் கட்டுதல் எனக் கூறுவதுண்டு. மணமகன், மணமகள் இருவருக்கும் தனித்தனியாக இந்தக் காப்புக் கட்டப்படும். அதாவது எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறைவேறவும், வேறு செயல் சிந்தனை இன்றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கி இருக்கவும், எல்லாப் பாவங்களையும் நீக்கிப் புனிதமயமாக்க (ர ஸ்ரீ எல்லா, ட்சா ஸ்ரீ பாபநாசம்) இந்த ரட்சாபந்தனம் செய்யப்படுகின்றது.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து, பிறிதொரு இடத்தில் இருத்திப் பெண்ணை அழைத்து வருவார்கள். சில இடங்களில் மணமகன் அப்படியே இருக்கப் பெண்ணை அழைத்து வருவதும் உண்டு. இதற்குரிய காரணம், பெண்ணுக்குக் காப்புக் கட்டாமல் மணமகனைப் பார்க்கக் கூடாது என்கின்ற ஒரு நியதியில் மணமகனைப் பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின்றனர். ஆனால் பெண் அழைத்து வரப்படும்போது முகத்திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன், மணவறையில் இருக்கவே பெண்ணையும் வைத்துக் காப்புக் கட்டலாம் என்கின்ற மரபிலும் இருவிதமாய் இக்கிரியை செய்வதுண்டு. மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்படும் வரை லட்சுமி, நாராயணராக மணமகனையும், பெண்ணையும் பாவனை செய்து கிரியை நிகழ்ச்சி, தாலி கட்டியபின் சிவசக்தி ரூபமாக அமர்த்திக் கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே முதலில் பெண் வலது பக்கமும், ஆண் இடது பக்கமும், தாலி கட்டிய பின் ஆண் வலமாகவும், பெண் இடமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது வலது மார்பிலேயே லட்சுமியைக் கொண்டுள்ளார். சிவன் தனது உடம்பின் இடது பாகத்தைச் சக்திக்கே கொடுத்துள்ளார் என்கின்ற ததுவம் இதனைப் புலப்படுத்தும்.

## கன்னிகாதானம்

பெண்ணை முறையாகப் பெற்றோர்களால் "தாரதத்தம்" ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்குத் தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு. இதற்குரிய கிரியையானது மணமகன், மணமகள் இரு பகுதிப் பெற்றோரையும் அழைத்துச் சங்கல்பம் செய்து அவர்களுடைய சந்ததி, வம்சாவழிப் பிதுர்களை நினைவு கூர்ந்து திருப்தியுறும் வகையில் நாந்திதானம் (அரிசி, மரக்கறி உட்பட பணம் வைத்து) நவக்கிரஹ பிரீதி தானம் (வஸ்திரம், பணம்) போன்றவற்றைக் குருக்களுக்கும் உதவிக் குருமாருக்கும் தானமாகக் கொடுத்தல்.

அதன்பின் சம்பந்திகள், ஒருவருக்கொருவர் உபசாரம் செய்தல் (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை. சபைச் சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிறப்பாகும்) அதன்பின் கிழக்கு முகமாய் (மணவறையிலிருந்து சபையோரைப் பார்க்கும் வண்ணம்) மணமகள் தந்தை அமர்ந்து, ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தேங்காய், மஞ்சள்துண்டு, சில்லறைக் காசு, பொன், மலர் போன்ற பொருட்கள் தட்டில் வைத்து, பெண்ணின் கையைத் தட்டிலே வைத்து, தந்தை தட்டையும், மகள் கையையும் சேர்த்துப் பிடிக்க, சிவாசாரியார் மணமக்களின் வம்சாவழியைச் சபையோர் அறிய எடுத்துக் கூறி, மங்கள ஸ்லோகம் கூறித் தாயார் மூன்று முறை தண்ணீர்விட மங்கள வாத்தியங்கள் முழங்க, கன்னிகையைத் தானமாய் மணமகன் கையில் கொடுப்பார். (கையிலே தண்ணீர் விடுதல் என்பது ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்கு முற்காலத்தில் அறிகுறியாயிருந்தது. நிலம் முதலியவற்றை விற்கும் போதும் இவ்வாறே நடந்தது. தண்ணீர்த் தாரையோடு கொடுத்தலால் இதற்குத் தாராதத்தம் என்பர். தத்தம் – கொடுத்தல்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாலி கட்டல்

தாலியிலே சிவலிங்கம் விநாயகர் அல்லது லட்சுமியினுடைய திருவுருவம் அமைத்தல் சிறந்தது. அதன்பின் ஒரு தட்டிலே மாங்கல்யம், கூறை, மாலை, கால்மிஞ்சி மற்றும் மங்கலப் பொருட்கள் வைத்து, மணமகனின் தந்தை, தாய், சபையோரிடம் ஆசி பெறுதல். பின் மணமகன் தனது கையால் மணமகளிடம் கொடுத்து கூறை மாற்றி வரச்செய்தல். கூறை மாற்றி வந்ததும், மாங்கல்ய பூஜை செய்து, மணமகன் எழுந்து வலது பக்கத்திற்கு வந்து சிவாசாரியார்கள், அவையோர் ஆசீர்வதிக்க, கெட்டி மேளம் முழங்க, கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். மங்கல நாண் பூட்டுதல் என்றும் இதைக் கூறுவார். அதன் பின் மணமகள் மணமகனுக்கு இடப்பக்கம் அமர்வாள். ஆதிகாலம் மஞ்சட் கயிற்றிலேதான் தாலி கட்டப்பட்டு வந்தது. தற்போது தங்கத்திலேயே கட்டுகின்றனர். இருப்பினும் பிராமண குலத்தைச் சார்ந்தோர், மற்றும் இசைவேளாளர் போன்றோர் இன்றும் "மஞ்சட்கயிறு" மாங்கல்யத்திற்குப் பாவிப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலும் பெரும்பாலும் மஞ்சட் கயிற்றுத் தாலியே கட்டுகின்றனர். மாங்கல்யம் என்பது ஓர் இழைகளை உடையது.

1. வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல்.
2. மேன்மை
3. ஆற்றல்
4. தூய்மை
5. தெய்வீக நோக்கம்
6. உத்தம குணங்கள்
7. விடுவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு

இவற்றை ஒரு பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டதாக காயத்திரி மந்திரம் குறிப்பிடுகின்றது.

## மாலை மாற்றுதல்

தாலிகட்டி முடிந்தபின் மாலை மாற்றுதல் வாழ்க்கையில் உடலாலும் உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்ற தத்துவத்திற்கு ஏற்ப பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலை ஆணுக்கும், ஆணின் கழுத்தில் இருக்கு மாலை பெண்ணிற்குமாக மூன்று முறை கழற்றி மாற்றுவார்கள். அதன்பின் பெண் இடப்பக்கமாவும் ஆண் வலப்பக்கமாகவும் மாறி இருந்து உமாமகேஸ்வரப் பாவனையாகக் கிரியை நிகழ்த்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் பழம் பருகுதல்

வாழ்க்கைத் துணை ஒருவருக்கொருவர் அமைந்த வேளை வாழ்க்கை என்றும் இனிப்பாக வாழ்வு அமைய முதல் பானமாய் பாலும் பழமும் பருகுதல். அதன்பின் மங்கள தரிசனமாக "கா" எனப்படும் கன்னிப் பசுக்கன்று காண்பிப்பார்கள். (பசுக்கன்று வசதியற்ற இடங்களில் "திருவிளக்கு" தரிசனம் செய்யலாம் என்பது மரபு).

## ஏழடி நடத்தல் (ஸ்ப்தபதி)

மணவறை முன் இருக்கும் கும்பங்களையும் அக்னியையும் சுற்றி வருவதற்காகவும் முதல் ஏழடி நடத்தல். அக்னி எரியும் ஹோம குண்டத்தில் இருந்து அம்பி வரை ஏழு இடங்களில் நெல் போட்டு அந்த இடங்களில் மணமகன் தன் கையால் பெண் வலக்காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல் "ஸப்தம்" எனக் கூறப்படுவது ஏழு எனப்படும். ஸப்தஸ்வரங்கள் (7) ஸப்த ரிஷிகள் (7), ஸப்த ஸாகரங்கள் (7), ஸப்த லோகங்கள் (7), ஸப்த நாடிகள் (7), ஸப்த கன்னிகைகள் (7), ஸப்த வாரங்கள் (7) எனக் குறிப்பிடப்பட்ட அனைத்தும் ஞானிகளால் வகுக்கப்பட்டன. இவை வாழ்க்கையின் நடைமுறைக்கு முன்னுதாரணமாகவும் செயற்படவும் கேட்கவும் ரசிக்கவும் உதவுவன.

கணவனானவன் தனது இஷ்டங்களுக்குப் பிரியமானவனாய்த் தன்னைச் சார்ந்தவனாய் இந்த ஏழடி மூலம் தன்னோடு சேர்த்துக் கொள்வதே இதன் பொருள்.

1. இஷ ஏக பதீபவ
2. ஊர் ஜே த்விபதீபவ
3. ராயஸ்பேஷாய த்ரிபதீபவ
4. மாயோபவ்யாய சதுஷ்பதீபவ
5. ப்ரஜாப்ய பஞ்சபதீபவ
6. ருதுப்ய ஷட்பதீபவ
7. சகா சப்தபதீபவ

## அம்மி மிதித்தல்

நான்கு மூலையில் விட்டமுள்ள ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன்மேல் பெண்ணின் காலைத் தூக்கி வைத்து தனது கையால் கணவன் மிஞ்சியைப் பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில அணிவது முறை. கல்லிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள நான்கு விட்டங்களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற நால்வகைக் குணஇயல்பைக் குறிக்கும். அதன் நடுப்பகுதியில் கணவன் பெண்ணின் காலைத் தூக்கி வைக்கும் போது இந்தக் கல்லைப் போல் உறுதியாய் தன் நிலையில் நின்று பிரியாது இளகாது தனது கணவன் மேல் உள்ள பற்றும் நீங்காது கற்பு நெறியில் நின்று விலகாது தன்னை உறுதியாய் நிலைப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். அதன் ஞாபகம் வாழ்க்கையில் என்றும் இருக்கவே தினமும் நடக்கும் போதும் கால்மிஞ்சி ஞாபகமூட்டும் என்பதாகும்.

## அருந்ததி பார்த்தல்

கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி எனும் மங்கை. அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திரமாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றாள். பெண்ணின் கற்பு நெறி பெருமையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசை பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக்கெனக் கும்பம் வைத்து கும்பத்திலே பூ போட்டு வணங்குவதும் உண்டு.

## மோதிரம் போட்டு எடுத்தல்

இது கிரியையிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும், சபைச் சிறப்புக்காகவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரில் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கை விட்டு எடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தையும் இது குறிக்கும்.

## அரசாணி

இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேச வழக்கம் போலும். அரசிலே சிவபிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம் இன்றும் உண்டு. ஒரே இடத்தில் அரசும் வேம்பும் நட்டுப் பூசிப்பதுமுண்டு. ஆதலால் அரசு சிவனைக் குறித்தல் பெறப்படும். ஆல் விஷ்ணுவைக் குறிப்பதென்பர். அரசும் ஆலும் சிவனையும் சக்தியாகிய விஷ்ணுவையும் பூசிப்பதற்காக நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்று மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முருக்கு நடப்படுகின்றது. முருக்கு அரசு போலவே சிவ வழிபாட்டுக்குரிய மரமென்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசிப்பதற்குரிய மரங்கள் என்றும், இவை மூன்றையும் நடும் வழக்கமும் உள்ளதென்றும் கூறுவர்.

## அறுகு அரிசி போடுதல்

இந்த நிகழ்வு மணமக்கள் பல்லாண்டு காலம் நீடுழி வாழ வேண்டும் எனப் பெரியோர்கள் மனமுவந்து ஆசீர்வதிப்பதாகும். அறுகானது நன்றகப் பரவும் தன்மையும், இலகுவில் அழியாத தன்மையும் உடையதால், மணமக்கள் இருவரும் அதே தன்மையோடு சிறப்புற்று வாழவேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து அரிசி போடுதல் அறுகரிசியாக வாழ்த்துவது மரபாகும். இவ்வறுகு அரிசி போடுவதில் மாறுபட்ட தன்மையைக் காணமுடியும். சிலர் கீழ் இருந்து மேல் நோக்கியும், சிலர் மேல் இருந்து கீழ் நோக்கியும் ஆசீர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை முழந்தாளிலும், புஜத்திலும், சிரசிலும், அறுகரிசி இட்டு ஆசீர்வதிப்பதே சரியான முறையாகும். மனிதனுடைய உடல் பஞ்ச பூத அமைப்பை உடையது. முழந்தாளுக்குக் கீழே "பிருதுவி தத்துவம்" பூமியோடு சம்பந்தமுடையது. "அப்பு தத்துவம்" மனிதனின் இகபர சுக வாழ்வின் ஆரம்பம். எனவே தான் முழந்தாளில் இருந்து ஆசீர்வாதம் தொடக்க வேண்டும். அத்தோடு, மேல் இருந்து கீழே போடுவது தோஷ பரிகாரம் நீங்க, வியாதிகள் நீங்க செய்யப்படும்.

"சீக்கழிப்பே" மேல் இருந்து கீழ்ப்போடுதல். ஆசீர்வாதம், முழந்தாள், புஜம் சிரசு என மூன்று இடங்களில் இடுவதே சரியான முறையாகும்.

## ஆராத்தி எடுத்தல்

திருமணச் சடங்கின் முடிவில் இது செய்யப்படுவதாகும். மணமக்களுக்கு "கண்ணூறு" (கண் திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன்மேல் கற்பூரம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்று முறை சுற்றிக் கற்பூரத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமகரணம்

பூமியிலே பிறக்கும் மனிதனுக்கு முதன்முதல் நடாத்தப்படும் கிரியை "நாமகரணம்" எனப்படும். பெயர் சூட்டுதல் எனவும் கூறலாம். இது குழந்தை பிறந்த ஆசௌச கழிவன்று நடாத்தப்படும் கிரியையாகும். குழந்தை பிறந்த நட்சத்திரத்தின் எழுத்தொலிக்கேற்பவும், தெய்வாம்சம் பொருந்திய பெயராகவும், சந்ததி வழித்தோன்றல் பெயராகவும் அமைதல் நன்று. குழந்தையின் பெயரை வலது காதிலே மூன்று முறை ஓதி, கற்கண்டு, தண்ணீர் பருக்க வேண்டும். குழுமியிருப்போருக்கும் இனிப்பு பானம் வழங்கவேண்டும். இதன் பொருள் எமது வம்சத்தில் தோன்றியுள்ள இக்குழந்தையை எமது வம்சாவழி செயல், தொழில், கொள்ள, கண்கண்ட தெய்வமும், சைத்திரிய வம்சமும் நிறைந்த சூரிய பகவானை வணங்கி சூரியன் போல் பெயரும் வாழ்வும் பிரகாசிக்க வேண்டும் என்ற மரபு முறையில் நடாத்தப்படுவதாகும்.

## காது குத்துதல் (கர்ணவேதனம்)

குழந்தை பிறந்த ஆசௌசக் கழிவன்று அல்லது 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களிலும் "காது குத்துதல்" வைபவம் நடாத்தப்படும். இதற்குப் பூஜை கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் வைத்து, நிறைகுடம் வைத்து, வணங்கிச் செய்தல் வேண்டும். இது குழந்தைகட்கு ஏற்படும் அரிட்டதோஷ நிவர்த்திக்காகவும் தமிழர் பாரம்பரிய கலாச்சாரங்களில் "கடுக்கன்" முக்கியமானதாக இருப்பதாலும் குழந்தைகட்கு அழகு சேர்க்கும் வகையிலும் இக் "கர்ணவேதனம்" என்ற விழா எடுக்கப்படுவது மரபு.

## தீட்சை

தீ கொடுத்தல், சை கெடுத்தல், அதாவது ஞானத்தகை் கொடுத்து, மலத்தைக் கெடுத்தல். தீச்சுடர்போல் பிரகாசமான ஞான அறிவைப் புகட்டி, மந்தமாய் மனதில் படிந்திருக்கும் மலங்களை நீக்கி விடுதலே தீட்சை எனப்படும். இதில் சமய தீட்சை, விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை என மூவகைப்படும். இதில் ஏழு வகையான முறைகளை சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை நயன தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மான தீட்சை, யோக தீட்சை, சாத்திர தீட்சை, ஒளத்திரி தீட்சை எனப்படும். முறையே கண்களால் அருட்பார்வையினாலும், பரிசம் தொடுவதனாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசத்தினாலும், அருள்நோக்கினாலும், யோகபலத்தாலும், மறை உபதேசத்தினாலும் ஹோமத்தினாலும் ஒரு மாணாக்கனைப் பரிசுத்த ஆத்மீக ஞானவாதியாக குருவால் ஆக்குவதே இத்தீட்சைகளாகும். இதில் முதலாவது தீட்சையான சமய தீட்சை பெறாதவன் சைவசமயி எனக் கூறுவதற்குத் தகுதி அற்றவன் என்பது ஆகமங்களின் கூற்று.

## ருதுசாந்தி

ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்ந்து, பருவமடைந்து இல்வாழ்க்கைக்கும், தாய்மைக்கும் தகுதி உடையவளாய் மாறும் நாளே பூப்படைதல் எனப்படும். பெண் பூப்படைந்து ஆசௌசம் கழியும் நாளில் சுத்தி புண்ணியாகம் செய்து, கும்பஜலத்தால் "ஸ்நானம்" செய்வித்து, கண்ணூறு கழியும் பொருட்டு, நிறைகுடம், நிறைநாழி, புட்டுக்கூம்பு, திருஷ்டி உருண்டை, குத்து விளக்கு போன்றவற்றால் ஆராத்தி எடுத்து திருஷ்டி கழிப்பது மரபு.

## சஷ்டி பூர்த்தி

மனித வாழ்வில் எல்லோருக்கும் எளிதில் கிடைக்க கூடிய நிகழ்வு அல்ல இது. எமது தமிழ் வருஷங்கள் 60 ஆகும். தான் பிறந்த வருஷத்தை மீண்டும் காணும் வாய்ப்பு 60 வது வயதில் தான் ஏற்படும். அது மட்டுமன்றி இந்த ஷஷ்டி பூர்த்தியில் மனைவி, மக்கள், பேரப்பிள்கைள் என அனைவரும் சூழ பிள்ளைகளாலே செய்யப்படும் கிரியையே ஷஷ்டி பூர்த்தியாகும். மிருத்திஞ்ச தேவரே கிரியையில் முதன்மை பெறுகின்றது. ஆயுள் நீடித்து நிலைக்க மிருத்திஞ்ச ஹோமமும், மற்றும் அறுபது வருஷங்கள், 27 நட்சத்திரங்கள், ஷப்த ரிஷிகள் (7), அறுபதாவது வயதிலே "அபிஞித" எனும் 28வது நட்சத்திர தேஜஸ் ஏற்படும். ஆக "அபஞித" பிரம்மா, ருத்திரனையும், மேற்கு கிழக்கில், விஷ்ணு, மார்க்கண்டேயர் மற்றும் இந்திரன் முதலானோர் நவக்கிரகங்கள், ஷப்த சிரஞ்சீவிகள் (7), போன்ற தேவதைகட்கு, பூஜை ஹோமம் செய்து, ஷஷ்டி விழா பெருமகனுக்கு கும்பஜலம் அபிடேகித்து ஆயுள் நீடிக்க பிரார்த்திப்பதாகும். ஜனன ஜாதகங்களில் ஒரு புருஷாயுசுபஹாத்ர என்பதாகும். அதாவது 120 வருடமாகும். அதில் பாதியே 60வது வயது. இதைப் பூரணப்படுத்துவமாய், சகல செல்வ போகங்களுடனும் உறவினர்களுடனும் நிறைந்த மனிதராய்க் காண்பதே சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியைகள்

## தகனக் கிரியை

ஒருவர் இறந்தால் பின் அவருடைய நன்மைக்காகச் செய்யப்படுவது அபரக் கிரியை (அபரம் பிந்திய) ஒவ்வொரு மனிதனின் ஆன்மாவும் நிலையானது. உடல் நிலையற்றது. உயிரான ஆன்மா பிரிந்ததும், உடல் வெறும் கூடாகி விடுகின்றது. பிறப்பிலிருந்து இறப்பு வரை அந்த ஆன்மா வாழ்ந்த உடலை மந்திரங்களோடு சேர்ந்த தகுந்த உபசாரங்கள் செய்து, அந்த ஆன்மாவின் புத்திரர்களால் அல்லது இரத்த உறவு கொண்ட உறவினரால் தகனம் செய்யப்படும் போது, அந்த ஆன்மாவுக்கு அங்கலாய்ப்பு அல்லது தொடர்ந்து செய்யவிருக்கும் கிரியைகளின் பலன் கிடைக்க வேற்று உடல், யமன், வருணன், அக்னி போன்ற தேவர்களால் கொடுக்கப்படுகின்றது என்பது ஐதீகம். இதற்காகவே இங்கு தகனக்கிரியை செய்து, அங்கு தக்க கூடு பெறும் ஆத்மாவாகின்றது.

## காடாற்றல் (அஸ்தி சஞ்சயனம்)

இது மரணச்சடங்கு நடந்த 5ம், 7ம், 9ம் நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் செய்யத்தக்கது. இதற்கு எலும்பைச் சேர்த்தல் என்று பொருள்படும். ஒரு பாத்திரத்தில் பாலை விட்டு அதற்குள் கால்பகுதி, நெஞ்சுப்பகுதி, முகம், தலை போன்ற இடங்களில் இருந்து எலும்பை எடுத்து (அந்தந்த இடங்களுக்குரிய மந்திர உச்சாடனங்களோடு எடுத்து) அப் பாத்திரத்தில் போட்டுப் பின்பு புணிணிய தீர்த்தங்களில் நதிகளில் விட வேண்டும். இறந்த ஆன்மாவின் பாவ கர்ம வினைகள் சென்று மோட்சம் பெறவேண்டி இக்கிரியை செய்வது மரபு.

## ஆசௌசம்

இதைத் துடக்கு என்றும் கூறுவதுண்டு. இறந்த ஆத்மாவின் இரத்த உறவு தொடர்புடையோர் அந்த ஆன்மா சாந்தி பெறவேண்டிக் கிரியை செய்து பிரார்த்திக்கும் நாட்கள் ஆசௌசம் எனப்படும். இந்நாட்களில் வேறு சிந்தனைகளின்றி மங்கள நிகழ்வுகள் தவிர்த்து, தனியாய் அவர் சார்ந்த குடும்பத்தினர் ஆ–ஆன்மா, சௌ–சௌக்கியம், சேஷம் பெற ஒடுங்கி இருக்கும் நாட்கள் (இது ஜனனம், மரணம், தகனம்) என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவகைக்கும் பொருந்தும். பூமியில் புதிதாய் ஜனனிக்கும் ஒரு ஆன்மாவின் பூமிவாழ் சௌக்கியத்திற்காகவும், ஆசௌசம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது பிராமணர்களுக்கு 11 நாட்களும், இசை வேளாளர்களுக்கு 16 நாட்களும், முறைப்படி சமய தீட்சை பெற்றோருக்கு 16 நாட்களும், மற்றையோருக்கு 31 நாட்களுமாய்க் கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

## அந்தியேட்டி

இறந்த ஆன்மாவை நினைத்து ஒரு கல்லிலே பூஜை செய்தல். இதை பாசண பூஜை என்றும் கூறுவர். 12 அங்குல நீளம் 6 அங்குல அகலமுடைய ஒரு கருங்கல், அல்லது செங்கல் எடுத்து அதில் மனித உரு வரைந்து இறந்த ஆத்மாவை ஆவாகித்து தகுந்த உபசாரம் மந்திரங்களோடு கொடுத்து, அபிஷேகம் செய்து, வஸ்திரம் அணிந்து, பூஜை தாப்பணம் செய்து கும்பத்திலே சிவனை ஆவாகித்து பூஜை செய்து கல்லிலே ஆவாகித்து ஆன்மாவிற்கு "பிரபூதபலி" அதாவது பெரிய அளவிலான சாதம், கறி, தயிர், நெய், பாயாசம் முதலியவைகளைப் படைத்து, பூஜை செய்து கல்லையும், சிவகும்பத்தையும் படையல் (பலி உருண்டை) இவற்றைக் கடலில் அல்லது நதியில் இடுதல். ஆன்மா சிவமோட்ச பதவி அடைய வேண்டி அந்தியேட்டி செய்யப்படும்.

## சபிண்டீகரணம் (ஏகோதிட்டம்)

இது அந்தியேட்டி செய்த அடுத்த நாளில் செய்வதாகும். இறந்த ஆத்மாவிற்கு "திருப்தி உண்டாகும் வண்ணம்" சிவபூசை செய்யும் சிவாசாரியர்களைக் கொண்டு, அந்த ஆன்மாவைச் சேரும் பொருட்டு ஏகோதிட்டம் ஏக ஒருவரை, உத்தஸ்டம் கருதல். அதாவது இறந்த ஒருவரைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவது ஏகோதிட்டம். வரிக்கும் அந்தணரைத் தமது இறந்த ஆத்மாவாகக் கருதி கொடுக்கப்படுவது. சாப்பாட்டுப் பொருட்கள், உடை, செபமாலை, காலணி, குடை, பொன் பொருள் என அவர் நித்திய கருமங்களுக்கு உபயோகிக்கக் கூடியதாயும், நித்தம் அவர் பூஜை செய்யும் போதும், அந்த நினைவில் அவர் ஆன்மசாந்திக்கும் ஒரு பிரார்த்தனை செய்யக்கடவர். அதனாலேயே "ஏகோதிஸ்டம்" கொடுப்பவரும் திருப்தியாய்க் கொடுக்க வேண்டும். வாங்குபவரும் அந்த ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்க வேண்டும். இருவரும் ஏக ஒருவரை உத்திஸ்டம் கருதிச் செய்வது எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளிலேயே நான்கு தேவர் எனக் கூறப்படும் விசுவதேவர், அப்பியாகதர், பிதுர்தேவர், நிமித்தர் என நால் வகைப்படும். தேவருக்கும், கொடுக்கும் பூஜை உபசார தானங்களே சபிண்டீகரணம் எனப்படும். இதற்கு அவரவர் வசதிக்கேற்ப இரண்டு அல்லது நான்கு பிராமண சிவாசாரியார்களுக்கு முறையான உபசாரங்களோடு உபசரித்து அவர்களின் மந்திர உச்சாடனங்களோடு திருப்திகரமான தானாதிகள் செய்து, பிண்டங்களை ஒரு வடிவமாக்கித் தண்ணீரில் விடுதல் அல்லது கரைத்து பசு மாட்டிற்கு வைத்தல் உத்தமமாகும். ஒவ்வொரு வர்க்கமாய் பிதுர்வர்க்கம் 3, மாத்துரு வர்க்கம் 3, நிமித்தர் 1, தகப்பன் வழி, தாய் வழி, இறந்தவர் என 7 பிண்டம் பிடித்து வைத்து பூஜித்து எல்லாவற்றையும் சேர்த்து பிதுர் தேவர் ஆக்கிவிடுதல் சபிண்டீகரணமாகும்.

## மாசிய சிரார்த்தம்

இறந்த ஆன்மாவானது ஓர் ஆண்டு ஆட்டத் திவசம் எனப்படும். ஆண்டுத் திவசம் முடியும் வரை, அந்த இறந்த திதியில் தனது இல்லம் நாடும் என்கிற மரபுக்கேற்ப ஒவ்வொரு மாதமும், அந்த ஆன்மா இறந்த திதியில் அந்தணர்களுக்குத் தானம் கொடுத்து வீட்டிலே ஆன்மாவிற்குப் படையல் வைத்துப் பூஜிப்பது மாசியம் எனப்படும்.

## ஆட்டத் திவசம்

வருட சிரார்த்தம் இந்தச் சிரார்த்தமே ஆன்மாவிற்கு ஓரிட ஓய்வு தருவது. அங்குமிங்கும் இடை நடுவாய் அல்லாது, அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம் என முறையாக ஆன்மாவிற்கு மகிழ்ச்சி தரும் கிரியைகள் செய்து, ஆண்டுத் திவசத்தில் ஆன்மா மோட்சம் பெறும் என்பது ஐதீகம். எனவே, இத்திவசமும் முற்கூறியவை போல் திருப்திகரமாய் செய்யப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.

## வருடச் சிரார்த்தம்

ஒவ்வொரு வருடமும் இறந்த ஆத்மாவின் திதி செய்யப்படுவது இதுவாகும். இதற்குக் கணக்கு இல்லை. எம் உயிருள்ள வரை எம்மால் இயன்றவரை இதைத் தொடர்ந்து செய்வதால் எம் வம்சம் தழைத்தோங்கவும், எமக்கு எமது பிள்ளைகள் கிரியைகள் செய்யாவிடினும், அந்தப் பலாபலன் எமக்குக் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மஹாளயம்

புரட்டாதி மாதத் தேய்பிறை பிரதமை முதல் அமாவாசை வரையிலான பதினைந்து அல்லது பதினாறு நாட்கள் பிதுர்களுக்குரிய பிரியமான பண்டதானம், தர்ப்பணம் முதலியன செய்யும் காலமே "மஹாளயம்" எனப்படுகின்றது.

தட்சணயத்திலே சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் காலம் அதன் நடுப்பாகம் புரட்டாதி மாதம். அதாவது பூமிக்கு நேரே நிற்கும் காலமும் சந்திரன் தென்பகுதிக்கு நேராகவும் நிற்கும் காலமாக அமைவதாலும், இக்காலம் பிதுர்களுக்குப் பிரியமான, விஷேடமான காலமாக அமைகின்றது. சில வேளைகளில் வருஷ சிரார்த்தம் நாம் செய்யத் தவறியிருப்பின், செய்ய முடியாத நிலைமைகள் அமைந்து விடினும், அதை இந்த மஹாளய பட்ச நாளில் செய்து கொள்ளலாம்.

### அமாவாசை விரதம்

இது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி திதி முடிந்த 15ம் நாளில் வருவது. இந்த நாளில் "தாமகு" தந்தை, பாட்டன் வழியினருக்கும் தர்ப்பணம் செய்து விரத அனுட்டானம் செய்வது மரபு. இந்த அமாவாசை விரதங்களிலே ஆடி மாதத்தில் வரும் அமாவாசை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந்நாளில் தந்தை வழியினர் சிரார்த்தங்கள் செய்யத் தவறியோர் இந்நாளில் செய்யலாம். பிதுர்களுக்குரிய திசையாகிய தெற்குத் திசைப் பக்கமாய் சூரியபகவான் உதயமாகும் காலமும், சந்திரனின் ஆட்சி வீடான கடகராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலமும் கொண்ட இந்நாள் பிதுர்களின் பிரிய நாள். எனவே இந்த ஆடி அமாவாசை புனிதத்துவம், மகிமையும் நிறைந்த நாளாய் மிளிர்கின்றது.

### பூரணை விரதம்

இவ் விரதம் ஒவ்வொரு மாதமும், அமாவாசைத் திதி முடிந்த 15ம் நாளில் வருவது. இந்நாளில் தாயாருக்கும் தாய் வழி உறவினர்களுக்கும் விரதமிருந்து தர்ப்பணம் செய்து, அன்னதானம் செய்வது உத்தமம். பௌர்ணமி விரதங்களிலே மிகவும் சிறப்பு வாய்ந்த "சித்ரா பௌர்ணமி" சூரியன் தனது உச்சம் பெற்ற வீடாகிய மேஷ ராசியில் சஞ்சரிக்கும் காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரம் மாத்துருகாரகன் சந்திரன் 7ம் இடம் சஞ்சரிக்கும் காலம். சூரியன் பிதா கிரஹம், சந்திரன் மாதா கிரஹம் என்பது ஜோதிட நூல்கள் கூறும் விதி. இந்த இரு கிரஹங்களின் சேர்க்கைப் பார்வை பெறும் நாட்கள், பிதுர்களின் பிரிய நாளாகின்றன. எனவே தான் ஆடி அமாவாசை, சித்ரா பௌர்ணமி சிறப்புப் பொருந்திய சிரார்த்த தினங்களாகப் பேணப்படுகின்றன.

## ஆசார முறைகள்

எமது இந்து சமயத்திலே முதன்மை பெறுவது "ஆசாரம்" அதை நல்ல முறையில் பேணிக் காப்பது முக்கிய கடமையாகும். தினமும் சூரிய உதயத்தின் முன் கண் விழித்துக் காலைக் கடன்கள் முடித்து ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி தரித்து, சுகந்த சந்தனம் பூசி, இறை வழிபாடு செய்து புலால் தவிர்ந்த உணவு உட்கொண்டு உடற்சுத்தி, உளச்சுத்தியோடு இருப்பதே முறையான ஆசாரம். முக்கியமாக ஆலய வழிபாடு செய்யுங் காலங்களிலாவது இவற்றை முறையாக மேற்கொள்ள வேண்டும். நாம் வாழும் இல்லத்தைக் கோயில் போல் ஆசாரமாக வைத்திருக்க வேண்டும். நாம் தீட்டுக்களுடன் வீட்டுக்குள் பிரவேசிப்பதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக ஒரு மரணச் சடங்கு வீட்டுக்குச் சென்றால், திரும்பி இல்லம் வந்ததும் முறைப்படி "ஸ்நானம்" செய்தே வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டும். காரணம் மரணச் சடங்கில் கண்ட துயரங்களும், அழுகை, துன்ப ஒலிகளும் மனம், வாக்கு, காயங்களில் பதிந்து நிற்கையில் "ஸ்நானம்" செய்து நித்திய அனுஷ்டானம் மூலம் மனம், வாக்கு, காயங்களைச் சுத்தமாக்கி செல்லுதல். அத்தோடு இறந்த பிரேத கிருமிகள் தொற்றா வண்ணம் உடற்சுத்தம் முறையாகச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*எங்கள் குடும்பத்திற்குக் கலங்கரை விளக்காய் இருந்து, எம்மை அன்பாலும் பண்பாலும் வழிநடத்திச் சென்று, இறைவனின் பாத கமலத்தில் இணைந்த, எம் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளிற் கலந்த கொண்டவர்களுக்கும், தொலை பேசி - தந்தி - கடிதங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உற்றார் - உறவினர் - பந்துமித்திரர் அனைவருக்கும், மற்றும் எமது துயர நிகழ்வில் பங்கு கொண்டு உதவி ஒத்தாசை புரிந்தவர் அனைவருக்கும், மேலும் அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளிலும், அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியினை நவில்கின்றோம்.*

இங்ஙனம்
திருமதி நீலாம்பிகை பினாகபாணி,
மற்றும் குடும்பத்தினர்.

*"சண்முக வாசா"*
*62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

*எது நடந்ததோ,*
*அது நன்றாகவே நடந்தது.*
*எது நடக்கிறதோ,*
*அது நன்றாகவே நடக்கிறது.*
*எது நடக்க இருக்கிறதோ,*
*அதுவும் நன்றாகவே நடக்கும்.*
*உன்னுடையது எதை இழந்தாய்,*
*எதற்காக நீ அழுகிறாய்?*
*எதை நீ கொண்டு வந்தாய்,*
*அதை நீ இழப்பதற்கு?*
*எதை நீ படைத்திருந்தாய்,*
*அது வீணாவதற்கு?*
*எதை நீ எடுத்துக் கொண்டாயோ,*
*அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.*
*எதைக் கொடுத்தாயோ,*
*அது இங்கேயே கொடுக்கப்பட்டது.*
*எது இன்று உன்னுடையதோ*
*அது நாளை மற்றொருவருடையதாகிறது.*
*மற்றொரு நாள்,*
*அது வேறொருவருடையதாகும்!*

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்"

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GRAPHIC DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195